# வடக்கு மாகாண பொதுச் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகள் – 2012

வடக்கு மாகாண பொதுச் சேவையில் வெற்றிடமாகவுள்ள கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **15.05.2012** ஆகும்.

| <u>பதவிப் பெயர்</u> | <u>பதவி இலக்கம்</u> |
|---|---|
| இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் பதவியின் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2012 | **01** |
| இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் வகுப்பு-III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2012 | **02** |

## 02 ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள்

- அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவுமாகும்.
- இவை இடமாற்றுசேவைகளாகும். இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

## 03 தகைமைகள்

- விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- (அ) விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். அல்லது

  (ஆ) விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தரவதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். அதாவது இவ் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

  (விண்ணப்பதாரி தகுதி பெறும் மாவட்டத்தைத் தீர்மானிக்கும் போது மேற்படி நிபந்தனைகள் குறித்த மாவட்டத்திற்கும் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். இதன் அடிப்படையிலேயே தெரிவு மேற்கொள்ளப்படும்)

  ***குறிப்பு:***

  வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்தபோதிலும் வடக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களிலே தற்காலிகமாக வதிவோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அவ்வாறாயின் அவர்கள் தமது தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமெனக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. அதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும், இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும், நேர்முகப்பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

- விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் / மாகாண அரச சேவையில் நிரந்தர பதவியில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

## 04 ஆட்சேர்ப்பு முறை

எழுத்துப் பரீட்சையில் திறமை அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகளுக்கும், ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைவாகவும், தேசிய மற்றும் மாகாண கொள்கைகளுக்கு அமையவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். நேர்முகப் பரீட்சையில் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். எழுத்துப் பரீட்சை நடாத்துவது கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும். கல்வித் தகைமைகள் பரிசீலிக்கப்படாமல் ஏனைய தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கான அனுமதி வழங்கப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும் பரிசீலிக்கப்படும். இதன் போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

நியமனத்திற்கான தெரிவின்போது நிரந்தர வதிவிடம் கவனத்திற்கெடுக்கப்படும். இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

4.1 இவ்விண்ணப்ப முடிவுத்திகதிக்குமுன் கோரப்பட்டுள்ள தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4.2 ஒவ்வொரு பாடத்திலும் 40% புள்ளிகளுக்கு குறையாமல் பெற்றவர்களே இப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்படுவர்.

4.3 வெற்றிடத்தின் 3% மாற்றுத்திறனாளிகளுக்காக (வலது குறைந்தோர்) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது மாற்றுத்திறனானது (வலது குறைவானது) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிருபித்தல் வேண்டும்.

## 05 பரீட்சைக் கட்டணம்

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா **400/-**ஐச் செலுத்தி வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களின் **3003** என்ற வைப்பு கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

வடக்கு மாகாணத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமான ரூபா **400/-**ஐ புத்தூர் தபாலகத்தில் மாற்றக்கூடிய வகையில் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்"** என்ற பெயருக்குக் காசுக் கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

28.02.2011, 01.003.2011, 11.03.2011ம் திகதிகளில் முறையே தினக்குரல், தினகரன் தினமின பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கு அமைய வடக்கு மாகாண பொதுச்சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகள் - 2010இல் இலங்கை தொழிநுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் பதவியின் பயிலுநர் தரத்திற்காக விண்ணப்பித்தவர்கள் மீள விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஏற்கனவே விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகள் மீள விண்ணப்பிக்கத் தேவையில்லை.

## 06 விண்ணப்பிக்கும் முறை

- ❖ இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவங்களிற்கமைவாக A4 அளவிலான (21செ.மீX29செ.மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை 15.05.2012 திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், 10ம் கட்டை, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால், புத்தூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

- ❖ அனுப்பிவைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக்குறிப்பிடல் வேண்டும்.

- ❖ ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகைமையுடைய விண்ணப்பதாரிகள் உரிய முறையில் பூரணபடுத்தப்பட்ட தனித்தனி விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும். சரிவர **பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்**. ஒரு பதவிக்காக விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பம் வேறு ஒரு பதவிக்காக மாற்றம் செய்யப்படமாட்டாது. இது தொடர்பாக செய்யப்படும் முறைப்பாடுகள் எற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- ❖ விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி, முன்னோடிப்பிரதி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- ❖ விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 07 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், 10ம் கட்டை, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால், புத்தூர்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும்.

- கோரிக்கைக் கடிதம் :-
- பரீட்சையின் பெயர் :-
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-
- தேசிய அடையாள அட்டை இலக்கம்:-
- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி:-
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி:-
- பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி:-
- அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம் :-

## 07 பரீட்சை நிலையம்

பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு,

| ***நகரம்*** | ***நகர எண்*** |
|---|---|
| யாழ்ப்பாணம் | **01** |
| மன்னார் | **02** |
| வவுனியா | **03** |
| கிளிநொச்சி | **04** |
| முல்லைத்தீவு | **05** |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

## 08. பொய்யான தகவல்களுக்கான தண்டனை

பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். பரீட்சார்த்தி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 09.1.1 இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் பதவியின் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2012

இந் நியமனம் இருவருட கால பயிற்சியைக் கொண்டது. பயிற்சி முடிவில் ஓர் தகைமைகாண் பரீட்சை நடாத்தப்படும். நிரந்தர நியமனம் பெறுவதற்கு பயிற்சியாளர்கள் இப்பரீட்சையில் கட்டாயமாகச் சித்தியடைய வேண்டும். அவர்கள் இப்பரீட்சையில் சித்தியடையத் தவறினால் நிரந்தர நியமனம் பெறுவதற்கு தகைமையற்றவர்களாவர். சித்தியடைபவர்களுக்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் பதவியின் வகுப்பு IIIக்கு நியமனம் வழங்கப்படும்.

**(அ)** ***சம்பள அளவுத்திட்டம்,*** பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006(iv) மற்றும் 07/2008க்கு அமைய, ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விவசாயப் போதனாசிரியர் பதவியின் பயிலுநர் தரத்திற்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா **13,120 – 1 X 145 – 13,265 (MN–1- 2006 –A)** ஆகும்.

**(ஆ)** ***கல்வித்தகைமை,*** கல்வி பொதுத் தராதர(சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் மொழி / இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் அடங்கலாக நான்கு திறமைச்சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

***அத்துடன்***

கல்விப் பொதுத் தராதர(உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞான பாடங்களான இரசாயனவியல், பௌதீகவியல், தாவரவியல், விலங்கியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

## 09.1.2 இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் வகுப்பு III தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2012

(அ) ***சம்பள அளவுத்திட்டம்,*** பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006(iv) மற்றும் 07/2008க்கு அமைய, ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விவசாயப் போதனாசிரியர் வகுப்பு-**III** பதவியின் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா **15,005 – 4 x 180 – 14 x 240 – 19,085 (MN-3-2006 A)** ஆகும்.

(ஆ) ***கல்வித்தகைமை,*** மேலே பந்தி **09.1.1.(ஆ)**இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகைமைகளுக்கு மேலதிகமாக கீழ்வரும் தொழில் தகைமைகளில் ஒன்றையும் பெற்றிருத்தல் வேண்டும்.

01 குண்டசாலை, அக்குனகொலபிளெஸ்ஸ, பெல்வெகெர, பிபிலை, லபுடுவ, வாரியபொல, வவுனியா, அநுராதபுரம், கறபின்ச ஆகிய விவசாயக் கல்லூரிகளிலொன்றில் இருவருட விவசாய டிப்புளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

***அல்லது***

02 அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் தொழில்நுட்ப விவசாயத்தில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

***அல்லது***

03 அக்னெஸ்(Aquinas) கல்லூரியில்இருவருட விவசாய டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

***அல்லது***

04 மேற்படி தகைமைகளுக்கு சமமானதென வட மாகாண தொழில்நுட்ப சேவைச்சபையினால் பொருத்தமான உசாவுதல்களின் பின் ஏற்கப்படத்தக்கதான தொழில்நுட்பத் தகைமை.

***அல்லது***

05 வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான மேற்கூறப்பட்ட தகைமைகளுக்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமை (உதாரணம்: விவசாயத்தில் விஞ்ஞானமானிப்பட்டம்)

***குறிப்பு***

விவசாயப் போதனாசிரியர் பதவியின் வெற்றிடத்தில் 10% திணைக்கள விண்ணப்பதாரிகளுக்காக ஒதுக்கப்படும்.

## 10. எழுத்துப் பரீட்சை

9.1.1, 9.1.2 ஆகிய இரு பதவிகளுக்கான போட்டிப்பரீட்சைகளுக்காக ஒரே பரீட்சை மாத்திரம் நடாத்தப்படும். இப்பரீட்சை சிங்களம் / தமிழ் ஆகிய இரு மொழிமூலங்களிலும் நடாத்தப்படும். இவ்வெழுத்துப்பரீட்சை கீழ் குறிப்பிடப்பட்ட இரு வினாப்பத்திரங்களை உடையதாக இருக்கும். இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு.

| ***வினாப்பத்திரம்*** | ***நேரம்*** | ***புள்ளிகள்*** |
|---|---|---|
| பொதுஅறிவு | 1 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| பொது உளச்சார்பு | 1 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |

**பொதுஅறிவு :**

**பகுதி I (50 புள்ளிகள்)**

இவ்வினாத்தாள் விண்ணப்பதாரரின் தேசிய, சர்வதேச மட்டத்திலுள்ள சமூக, பொருளாதார அரசியல் மற்றும் இன்னோரன்ன பொதுஅறிவினை பரிசோதிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும்.

**பகுதி II (50 புள்ளிகள்)**

விவசாயம் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படும்

**உளச்சார்பு :**

இவ்வினாத்தாள் விண்ணப்பதாரரின் தர்க்கிக்கும் திறன், பகுப்பாய்வுத் திறன், பொது விவேகம் ஆகியவற்றைப் பரீட்சிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும்.

***குறிப்பு***

- திருத்தமற்ற கையெழுத்திற்கும் சொற்பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும் எழுத்துத் தெளிவில்லாத ஒரு பரீட்சார்த்தி தகைமையை இழக்க நேரிடும்.
- நியமனத்தின் பொருட்டு தகைமை பெறுவதற்கு எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு வினாப்பத்திரங்களிலும் குறைந்த பட்சம் 40% புள்ளிகள் பெறுதல் வேண்டும்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படும். அத்துடன் தமிழ்மொழி, சிங்கள மொழி, உரைகளுக்கிடையிலான ஏதேனும் வேறுபாடு காணப்படின் தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

இவ்விளம்பரத்தை வடக்கு மாகாணசபையின் www.np.gov.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**ஆர்.தியாகலிங்கம்.**
**செயலாளர்,**
**மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்,**
**யாழ்ப்பாணம்.**